


24. 08. 2025

தலைப்பு செய்திகள்

- சுய சார்பு இந்தியாவின் புதிய சகாப்தமாக ககன்யான் திட்டம் திகழும் என மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

- சட்டப்பேரவைகள் மக்கள் பிரச்சனைகளை விவாதிப்பதற்கான பாரபட்சமற்ற தளமாக திகழ வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கூறியுள்ளார்.

- தமிழ்நாட்டில் சொத்து வரி உயர்வு இல்லை என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெளிவுபடுத்தியுள்ளார்.

- மாணாக்கருக்கு தரமான கல்வி வழங்குவதற்கான புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக தமிழக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

- U.S. ஓப்பன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள் நியூயார்க்கில் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் ஐயாயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை நாளை தொடங்கிவைக்கிறார்.

இரண்டு நாள் பயணமாக நாளை அங்கு செல்லும் பிரதமர், சாலை, ரயில் உள்ளிட்ட பல்வேறு புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

ஹன்சல்பூரில் 100 நாடுகளுக்கு மின்சாரவாகன ஏற்றுமதியை நாளை மறுநாள் தொடங்கிவைக்கும் பிரதமர் பொதுக்கூட்டத்திலும் உரையாற்ற உள்ளார்.

***********

ராஜ்நாத்சிங்

நாட்டின் தொழில்நுட்ப சாதனைகளை தாண்டி சுய சார்பு இந்தியாவின் புதிய சகாப்தமாக ககன்யான் திட்டம் விளங்கும் என மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்வெளி வீரர்கள் சுபான்ஷு சுக்லா, பிரசாந்த் பாலகிருஷ்ணன் நாயர், அஜித் கிருஷ்ணன், அங்கத் பிரதாப் ஆகியோரை புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பாராட்டிய அவர், விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப நாடு முழுமையாக தயாராகி உள்ளதாக கூறினார்.

செயற்கைகோள்களை செலுத்துவது மட்டுமல்லாமல் விண்வெளி துறையில், நாட்டின் முழு திறனை ககன்யான் வெளிப்படுத்தும் என்றார்.

ஆராய்ச்சி மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததியினருக்கான எரிசக்தி, பொருளாதாரம் பாதுகாப்பு உள்ளிட்டவற்றை நமது விண்வெளி ஆய்வுகள் உறுதி செய்யும் என திரு. ராஜ்நாத்சிங் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக ஒடிசா கடற்கரையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் உருவாக்கிய ஒருங்கிணைந்த வான் பாதுகாப்பு ஆயுத கட்டமைப்பின் முதல் விமான சோதனை வெற்றியடைந்ததற்கு வாழ்த்து தெரிவித்த அவர், இதன்மூலம் எதிரிகளின் அதிவேக வான்வழி தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு நாட்டின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றார்.

***********

அமித்ஷா

சட்டப்பேரவைகள் மக்கள் பிரச்சனைகளை விவாதிப்பதற்கான பாரபட்சமற்ற பொது தளமாக திகழ வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

தேசிய அளவிலான சட்டப்பேரவை தலைவர்கள் இரண்டு நாள் மாநாட்டை புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், பேரவையின் மாண்பு மற்றும் விதிமுறைகளை உறுதி செய்வதை ஒவ்வொரு சட்டப்பேரவை உறுப்பினரும் தங்கள் கடமையாக கருத வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நாட்டின் சுதந்திரத்திற்கு பின் ஜனநாயக முறையில் நாட்டை வழிநடத்துவதன் அவசியத்தை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளை ஆக்கப்பூர்வமான முறையில் வழிநடத்த இத்தகைய மாநாடு வழிகோலுவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் முதலாவது சட்டப்பேரவை தலைவர் விட்டல்பாய் பட்டேல் பதவி ஏற்ற நூற்றாண்டு விழாவை நினைவு கூறும் வகையில் இம்மாநாடு நடைபெறுகிறது.

விட்டல்பாய் பட்டேலின் நினைவு தபால் தலையும் இன்று வெளியிடப்பட்டது.

***********

உபேந்திரா திவேதி

ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திரா திவேதி நான்கு நாள் அரசு முறை பயணமாக நாளை அல்ஜீரியா செல்கிறார்.

இப்பயணத்தின்போது இருநாடுகளுக்கிடையிலான ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்ததல், பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்பு சவால்கள் குறித்து அந்நாட்டு ராணுவ உயர் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

***********

ஃபிஜி பிரதமர்

ஃபிஜி பிரதமர் சிதிவேனி லிகமமடா ரபுகா 3 நாள் பயணமாக இன்று இந்தியா வந்தடைந்தார்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோரை நாளை சந்தித்து அவர் பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

***********

அஞ்சலக பார்சல் சேவை

அமெரிக்காவிற்கான அஞ்சலக பார்சல் சேவைகள் நாளைமுதல் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அஞ்சல் துறை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து அனுப்பப்படும் 70 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான பொருட்களுக்கு வரும் 29ஆம் தேதிமுதல் 50 சதவிகித வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் அரசு அறிவித்ததை அடுத்து இந்நடவடிக்கை.

***********

முதலமைச்சர்

முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்கம் சென்னை மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்க பள்ளியில் நாளை மறுநாள் தொடங்குகிறது.

இதன்மூலம் மாநிலத்தில் 20 லட்சத்து 59 ஆயிரம் மாணாக்கர் பயனடைவார்கள்.

***********

பள்ளிகல்வித்துறை

தமிழக மாணாக்கர் அனைவருக்கும் தரமான கல்வியை அளிக்கும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் 352 கோடி ரூபாய் மதிப்பில் 44 மாதிரி பள்ளிகள்,

455-அரை கோடி ரூபாய் மதிப்பில் 23 ஆயிரம் திறன்மிகு வகுப்பறைகள்,

100 கோடி ரூபாய் செலவில் 28 தகைசால் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக சென்னையில் இன்று வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 79 ஆயிரத்து 723 இடைநிலை ஆசிரியர்களுக்கு 81 கோடி ரூபாய் செலவில் கை கணினிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும்,

மாணாக்கரை ஊக்கப்படுத்தும் வகையில் வெளிநாட்டு கல்வி சுற்றுலா திட்டங்களை செயல்படுத்தப்படுவதாக கூறியுள்ளது.

***********

கே.என்.நேரு

தமிழகத்தில் 250 கோடி ரூபாய் மதிப்பில் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் கோவையில் செயல்படுத்தப்பட உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

கோவையில் செம்மொழி பூங்கா, சர்வதேச ஹாக்கி மையம் அமைக்கும் பணிகளை இன்று நேரில் ஆய்வு செய்த அவர், சென்னையில் தொடங்கப்பட்ட மக்கும் குப்பைகளை உரமாக்கும் திட்டம் விரைவில் கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகளிலும் விரிவுபடுத்தப்படும் என்றார்.

தமிழகத்தில் சொத்து வரி உயர்வு இல்லை என தெளிவுபடுத்திய அமைச்சர் இதுதொடர்பான புகார்கள் இருப்பின், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கோவை மாநகராட்சியில் 70 கோடி ரூபாய் மதிப்பில் நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்கும் திட்டம் உள்ளிட்ட வளர்ச்சி திட்டங்களை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

வாய்ஸ்

***********

இருவரி

நாடுமுழுவதும் உள்ள ஐஐடி உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் முதுநிலை பொறியியல் படிப்புகளில் சேர்வதற்கான கேட் நுழைவு தேர்விற்கு நாளைமுதல் அடுத்த மாதம் 25ஆம் தேதிவரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் சிவகங்கை மாவட்டத்தில் வரும் 9, 10 தேதிகளில் நடைபெற உள்ளது.

இதற்கு பதிவு செய்த போட்டியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் மற்றும் நாட்களில் பங்கேற்க ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி அறிவுறுத்தியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியம் கீரணிபட்டி கிராமத்தில் "உழவரை தேடி வேளாண்மை உழவன் திட்டம்" இன்று நடைபெற்றது.

பாரம்பரிய சிறுதானியங்கள், பயறு வகைகளை பாதுகாத்தல், மண்புழு உற்பத்தியை ஊக்குவித்தல், இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல் உள்ளிட்டவை குறித்து இதில் விளக்கம் அளிக்கப்பட்டது.

சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டி தஞ்சை காவல்துறை சார்பில் இன்று நடைபெற்றது.

ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிசுகளை வழங்கினார்.

***********

தூத்துக்குடி

திருச்செந்தூரில் 80 அடி வரை கடல் உள்வாங்கி காணப்படுவதாக எமது தூத்துக்குடி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

நம்ம ஊரு திருவிழா

தமிழகத்தின் பாரம்பரிய கலைகளை ஊக்குவிக்கும் நம்ம ஊரு திருவிழா காஞ்சிபுரத்தில் நாளை தொடங்குகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

U.S. ஓப்பன்

U.S. ஓப்பன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள் நியூயார்க்கில் இன்று தொடங்குகின்றன.

ஆடவர் பிரிவில் நடப்பு சேம்பியன் இத்தாலியின் ஜெனிக் சின்னர்,

ஸ்பெய்னின் கார்லஸ் அல்கராஸ்,

ஜெர்மனியின் நோவாக் ஜோக்கோவிச், அலெக்ஸாண்டர் ஸவ்ரவ்,

மகளிர் பிரிவில் பெலாரசின் சபலென்கா, போலந்தின் இகா ஸ்வியாடெக்,

அமெரிக்காவின் கோகோ கா.்.ப் உள்ளிட்ட முன்னனி வீர வீராங்கணைகள் களத்தில் உள்ளனர்.

***********

புஜாரா – ஓய்வு

இந்திய கிரிக்கெட் வீரர் புஜாரா அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

37 வயதான புஜாரா 103 டெஸ்ட் போட்டிகளில் 19 சதங்கள், 35 அரை சதங்கள் உட்பட 7 ஆயிரத்து 195 ரன் குவித்தவர்.

5 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாடி உள்ள அவர், இதுவரை 20-20 போட்டிகளில் விளையாடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது